



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (15.11.2024) சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் பேருந்து போக்குவரத்து சாலை உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்துவது மற்றும் புதிய மேம்பாலங்கள் அமைப்பது குறித்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், மருத்துவர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள், ப.சிவகுமார் (எ) தாயகம் கவி, ஆர்.டி.சேகர், த.வேலு, இ.பரந்தாமன், ஜெ.கருணாநிதி, டாக்டர் நா.எழிலன், ஐட்ரீம் ஆர்.மூர்த்தி, ஜே.ஜே.எபினேசர், ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா, கே.பி.சங்கர், ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு. மகேஷ் குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்கள், அரசு முதன்மைச் செயலாளர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பின்படி சென்னைக்கு அருகாமையில் சர்வதேச தரத்திலான விளையாட்டு நகரம் (GLOBAL SPORTS CITY) அமைப்பதற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து, தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (16.11.2024) துறை சார்ந்த அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் கே.மணிவாசன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா,பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன்,சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, நிதித்துறை செயலாளர் (செலவினம்) எஸ்.நாகராஜன், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழக தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்.நந்தகுமார், சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர்ஜெ.மேகநாதரெட்டி,டேபிள் டென்னிஸ் ஒலிம்பிக் வீரர் சரத் கமல், இந்திய அலைச்சறுக்கு(SURFING) கூட்டமைப்பின் தலைவர் அருண் வாசு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (15.11.2024) ஒன்றிய அரசின் உள்துறை அமைச்சகம், இளைஞர் விவகாரம் & விளையாட்டு அமைச்சகம், தமிழ்நாடு மை பாரத் நேரு யுவகேந்திரா மற்றும் தனியார் கல்லூரி இணைந்து நடத்திய காஷ்மீர் இளைஞர் கலை, பண்பாடு, சுலாச்சார பரிமாற்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற காஷ்மீர் இளைஞர்கள் மற்றும் இளம் பெண்கள் சந்தித்து அவர்களுடன் குழு புகைப்படம் எடுத்து கொண்டனர். இந்நிகழ்வில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, மை பாரத் நேரு யுவகேந்திரா மாநில இயக்குநர் செந்தில்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.




தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 15.11.2024 அன்று செங்கல்பட்டு மாவட்டம், மாமல்லபுரத்தில், உலக சிறு விலங்குகள் கால்நடை மருத்துவ சங்கம் மற்றும் இந்தியாவின் சிறு விலங்கு பயிற்சியாளர்கள் சங்கங்களின் கூட்டமைப்பின் (FSAPA) சார்பில் பாரா பேட்மிண்டன் வீராங்கனை செல்வி துளசிமதி முருகேசனுக்கு பாராட்டு விழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், நாடாளுமன்ற உறுப்பினர் க. செல்வம், சட்டமன்ற உறுப்பினர்இ.கருணாநிதி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாதரெட்டி, மாவட்ட ஆட்சித் தலைவர்ச.அருண்ராஜ் மற்றும் அரசு உயர்அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# நீலகிரி மாவட்டம்பந்தலூரில் கலைஞர் நூலகம்!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் திறந்து வைத்தார்!

உதகை, நவ. 17-

நீலகிரி மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில், கூடலூர் சட்டமன்ற தொகுதி பந்தலூரில் அமைக்கப்பட்ட "கலைஞர் நூலகத்தை" மாநில இளைஞர் அணி துணை செயலாளர், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் பிரகாஷ் தலைமையில், மாவட்ட கழக செயலாளர் பா.மு.முபாரக், தேர்தல் பணி செயலாளர் அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் மற்றும் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் முரளிதரன், நவுபல், பாபு, நாகராஜ், பத்மநாபன், வினோத்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னிலையில், நீலகிரி மாவட்ட பொறுப்பு அமைச்சர் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் திறந்து வைத்தார்.

மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சசி குமார் வரவேற்றார். நெல்லியாளம் நகர செயலாளர் சேகரன் நன்றி கூறினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட துணை செயலாளர் ரவி குமார், மாவட்டப் பொருளாளர் நாசர் அலி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் திராவிட மணி, காசிலிங்கம், ராஜூ, மாநில அணிகளின் துணை செயலாளர்கள் பொள் தோஸ், வாசிம்ராஜா, ஒன்றிய கழக செயலாளர்கள் லியாகத் அலி, சிவானந்த ராஜா, சுஜேஷ், கூடலூர் நகர செயலாளர் இளஞ்செழியன், பொதுக்குழு உறுப்பினர்கள் ராஜா, அமிர்தலிங்கம், தொரை, மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் ராஜேந்திரன், பேரூர்க் கழக செயலாளர்கள் சின்னவர், சுப்ரமணி, உதயகுமார், அணிகளின் அமைப்பா ளர்கள் சிவசுப்ரமணியம், ஆலன், சீனிவாசன், கோமதி, ஜெயந்தி, அன்வர் அப்துல்லா, உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள் சிவகாமி, பரிமளா, கீர்த்தனா, வள்ளி, சித்ராதேவி, டெர்மிலா மற்றும் அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் கூடலூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட நகர ஒன்றிய பேரூர் கழக இளைஞர் அணியினர், பொதுமக்கள் உள்ளிட்ட அனைவரும் திரளாக கலந்துகொண்டு சிறப்பித்தினர்.

## சமூக வலைதளங்களில் வலம் வருவது!






ஓமான் தி.மு.க. அயலக அணி சார்பில் கழக முப்பெரும் விழா மற்றும் திராவிட முன்னேற்ற கழகம் தொடங்கப்பட்டதன் பவள விழா நிகழ்ச்சி மிக விமரிசையாக மஸ்கட் மாநகரில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக மரியாதைக்குரிய நாடாளுமன்ற உறுப்பினர் திருவண்ணாமலை வடக்கு மாவட்ட செயலாளர் எம்.எஸ். தரணிவேந்தன் மற்றும் கழக கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை மாநில செயலாளர் இறையன்பன் குத்தூஸ் அவர்கள் பங்கு கொண்டனர். இந்நிகழ்ச்சியில் ஓமான் தி.மு.க. செயலாளர் பி.கே சிவக்குமார், அவை தலைவர் ஆர். பாலமுருகன் பொருளாளர் சிவ. செந்தில் புலவர் அப்துல் சலாம் போன்றோரும் கலந்து கொண்டனர்.

### வேலூர் மாவட்டம்

# காட்பாடியில் வாக்குச்சாவடி முகவர்கள் ஆலோசனை கூட்டம்!

## அமைச்சர் துரைமுருகன் பங்கேற்றார்!

வேலூர், நவ. 17-

வேலூர் மாவட்டம் காட்பாடியில் தி.மு.க வாக்குச்சாவடி முகவர்கள் ஆலோசனை கூட்டம் நடந்தது. அமைச்சர் துரைமுருகன் பங்கேற்றார். கூட்டத்திற்கு காட்பாடி வடக்கு பகுதி தி.மு.க. செயலாளர் வன்னியராஜா தலைமை தாங்கினார்.

காட்பாடி தெற்கு பகுதி செயலாளரும் மாநகராட்சி துணை மேயருமான எம். சுனில்குமார் அனைவரையும் வரவேற்றார். மாவட்ட பொருளாளர் சி.நரசிம்மன், ஒன்றிய செயலாளர்கள் தணிகாசலம், எஸ்.சரவணன் கே. கருணாகரன் சி.ரவி, பரமசிவம், முருகப்பெரு மாள் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக சட்டமன்ற தொகுதி பார்வையாளர் குறிஞ்சி சிவா, மாவட்ட செயலாளர் கழக செயலாளர் ஏ.பி நந்தகுமார் எம்.எல்.ஏ, மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ ஆகியோர் பேசினர்.

கூட்டத்தில் நீர்வளத் துறை அமைச்சர் துரை முருகன் அவர்கள் பேசியதாவது:

தேர்தல் எப்படி நடக்கும் எப்படி வியூகம் வகுப்பது என்பது எனக்கு தெரியும் .யாரும் என்னை ஏமாற்ற முடியாது. ஒருமுறை நான் ஏமாந்து விட்டேன் அது கோவிட் காலத்தில் நடந்தது.

அப்போது என்னால் வேக மாக வரவும், போகவும் முடியவில்லை . இல்லை என்றால் கண்ணில் விரலை விட்டு ஆட்டி இருப்பேன் .

சிலர் எனக்கு எதிராக துரோகங்களை செய்தனர். அத்தகையவர்களை, களை எடுத்து விட்டு தேர்தலை வெற்றிகரமாக நடத்திக் காட்டும் ஆற்றல் எனக்கு உண்டு.

தான் யாரையும் மன்னிப்பேன் கட்சிக்கு துரோகம் செய்பவர்களை மன்னிக்க மாட்டேன். என்னையே கொல்ல வந்தால் கூட மன்னிப்பேன் ஏனென்றால் 60,70 ஆண்டுகள் திமுகவை வளர்த்தவன் நான். ஆகையால் இது எனது கட்சி. நம்முடைய கட்சி என்று இருப்பவன் நான். போன முறை நான் எல்லோரும் நல்லவர்கள் என்று நினைத்து ஏமாந்து விட்டேன். விளைவு சில பாடங்கள் எனக்கு கற்பிக்கப் பட்டது. அதை திரும்பி பார்க்க மாட்டேன். காட்பாடி தொகுதியில் பொன்னையில் மேம்பாலம், தடுப்பணைகள் ,அரசு மருத்துவமனை , காட்பாடியில் இருந்து சத்துவாச்சாரிக்குச் செல்ல ரூ.100 கோடியில் மேம்பாலம் என பல திட்டங்களை முடித்து விட்டேன். மகிமண்டலத்தில் தொழிற்பேட்டையுடன் 2வதாக காட்பாடி யில் ஒரு தொழிற்பேட்டை வரப்போகிறது.

இதுபோக தமிழக முதல்வர் ஸ்டாலின் மக்களுக்காக பல்வேறு சிறப்பான திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். இது போன்ற திட்டங்களை மக்களிடம் பேச வேண்டும். ஆகவே வாக்குச் சேகரிப்பில் பாக முகவர்கள் முக்கியமாக அவர்கள் தங்கள் பணியை சிறப்பாக செய்யவேண்டும். பருவ மழைக்கு பின்னால் நான் ஒவ்வொரு பகுதியாக வருவேன். செயல்படாதவர்கள் தூக்கி எறியப்படுவார்கள்.

இவ்வாறு அவர் பேசினார்.

### 'வேர்களைத் தேடி' - பண்பாட்டு சுற்றுலாத் திட்டத்தில் பங்கேற்றிட

# அயலகத் தமிழ் இளைஞர்கள் விண்ணப்பிக்கலாம்!

## தமிழக அரசு அறிவிப்பு!

சென்னை, நவ.17-

அயலகத் தமிழர் நலத்துறையினரால் நடத்தப்படும் பண்பாட்டுச் சுற்றுலாத் திட்டமான 'வேர்களைத் தேடி' திட்டத்தில் பங்கேற்றிட அயலக தமிழ் இளைஞர்கள் விண்ணப்பிக்கலாம் என்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

இது குறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு:-

12.01.2024 அன்றைய செய்தி வெளியீட்டில் முதலமைச்சர் அவர்கள் "புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் குழந்தைகள், இளம் மாணவர்கள், தாய்த் தமிழ்நாட்டின் மரபின் வேர்களோடு உள்ள தொடர்பை புதுப்பிக்கும் வண்ணம், ஆண்டுக்கு 200 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழ்நாடு பண்பாட்டு சுற்றுலாவிற்கு அழைத்துவர ஏற்பாடு செய்யப்படும்" என அறிவித்தார்.

அதன் அடிப்படையில், இந்த பண்பாட்டு சுற்றுலா திட்டம் "வேர்களைத் தேடி" என்ற பெயரில் அயலகத் தமிழர் நலத்துறையினால் நடத்தப்பட்டு வருகிறது. இதுவரை இரண்டு கட்ட பயணங்களில் 157 அயலகத் தமிழ் இளைஞர்கள் இப்பயணத்தில் பங்கேற்றுள்ளனர். முதற்கட்ட பயணத்தில் (27.12.2023 - 12.01.2024) ஆஸ்திரேலியா, பிஜி, இலங்கை மற்றும் கனடா ஆகிய நாடுகளைச் சேர்ந்த 57 மாணவர்கள் மற்றும் இரண்டாம் கட்ட பயணத்தில் (01.08.2024 - 15.08.2024) தென் ஆப்ரிக்கா, உகாண்டா, குவாடலூப், மார்டினிக், பிஜி, இந்தோனேஷியா, மொரிஷியஸ், ஆஸ்திரேலியா, மாலத்தீவு, கனடா, மியான்மர், மலேசியா, இலங்கை, பிரான்சு மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகளைச் சேர்ந்த 100 அயலகத் தமிழ் இளைஞர்கள் தமிழகத்தின் முக்கிய வரலாற்று மற்றும் பண்பாட்டு சிறப்புமிக்க இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு தமிழ் மொழி, தமிழர் பண்பாடு, தமிழர் வாழ்வியல் மற்றும் கட்டிடக் கலை குறித்து விளக்கப்பட்டது.

தொடர் நிகழ்வாக, மூன்றாம் கட்ட பயணம் 29.12.2024 முதல் 12.01.2025 வரை பதினைந்து நாட்களுக்கு செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது. இந்த கலாச்சார சுற்றுலா நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக, வரலாற்று மற்றும் கலாச்சார முக்கியத்துவம் வாய்ந்த கல்லணை அணை, திருவள்ளுவர் சிலை, வ.உ.சி நினைவிடம், கீழடி, பாம்பன் பாலம், சித்தன்ன வாசல், கானாடு காத்தான் அரண்மனை, சரஸ்வதி மஹால் நூலகம், தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோவில் தாராசுரம் கோவில், மற்றும் மாமல்லபுரம் கோவில் போன்ற இடங்களுக்கு பங்கேற்பாளர்கள் அழைத்துச் செல்லப்படுவார்கள்.

கலாச்சார சுற்றுப்பயணத் திட்டத்தில் பங்கேற்பாளர்களுக்கான பயிற்சி பட்டறைகள், தகவல் அமர்வுகள் மற்றும் கலாச்சார நடவடிக்கைகள் ஆகியவை அடங்கும். சென்னையில் தொடங்கும் இந்த பயணம் திருச்சிராப்பள்ளி, மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி, காரைக்குடி, தஞ்சாவூர் உள்ளிட்ட 15 மாவட்டங்களை உள்ளடக்கியதாக அமையும்.

இந்த பயணத்தின் இடையே 01.01.2025 அன்று நடைபெறும் அய்யன் திருவள்ளுவர் சிலை திறப்பின் வெள்ளி விழா நிகழ்விலும் மற்றும் இந்த பயணத்தின் முடிவில் ஜனவரி 11 மற்றும் 12, 2025 ல் நடைபெறும் மாபெரும் கொண்டாட்டமான அயலகத் தமிழர் தின விழாவில் மாணவ, மாணவியர்கள் பங்கேற்பார்கள்.

இப்பயணத்தின் நிறைவினைத் தொடர்ந்து, அவர்கள் வாழும் நாடுகளுக்கும் மற்றும் தமிழ்நாட்டிற்கும் இடையே பண்பாட்டு தூதுவர்களாக செயல்பட்டு, தமிழ் மொழி, தமிழர் பண்பாடு மற்றும் தமிழர் வாழ்வியல் குறித்த விடயங்களை அவர்தம் நாடுகளில் பரப்பிடவும், தொழிற்சார்ந்த மற்றும் கல்விசார்ந்த தளங்களில் இணைந்து செயல்பட தங்களால் இயன்ற பணிகளை மேற்கொள்வர்.

இப்பயணத்தில் கலந்து கொள்ள விரும்பும் அயலகத் தமிழ் இளைஞர்கள் இத்துறையின் கீழ்க்கண்ட வலைதள பக்கத்தில் பதிவு செய்ய தமிழ் நாடு அரசின் சார்பில் அழைப்பு விடுக்கப்படுகிறது.

வலைதளம்: https://nrtamils.tn.gov.in/portal/ryr.

இவ்வாறு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.